**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**HM GWOP.No.140/2021**

**ம.சா. – 1 – சசிரேகா , க/பெ.சசிக்குமார்**

**நாள். 24.02.2026**

**ம.சா. 1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த மனுவில் என் குழந்தையை பார்ப்பதற்காகத்தான் மனுச் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரர் சசிக்குமாருக்கும் 08.08.2011 ல் கோவை மாவட்டம் நோட்டரி அட்வகேட் S.M.பிரபாகரன் அலுவலகத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மருதமலை முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றதாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. மருதமலை முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்ததற்காக சொல்லப்படும் நோட்டரி நகல் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான்.அதன் அசல் என்னிடம் உள்ளது. அது **எ.ம.சா.ஆ 1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் மருதமலையில் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கணபதியில் உள்ள விநாயகர் கோவிவில் திருமணம் நடைபபெற்றது என்றால் சரிதான். அது **எ.மசா.ஆ.2. (எண்ணிக்கை –3)** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் காவல்துறையில் தலைமை காவலராக ஒட்டன்சத்திரத்திரம்,அம்பிளிக்கை காவல்நிலையத்தில் பணிபுரிகிறேன். நான் எதிர்மனுதாரரை பிரிந்து 5 வருடங்களாக தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன். 2019 லிருந்து தனியாக வாழ்ந்து வருகிறேன். எனக்கு 1 மகனும் 1 மகளும் உள்ளார்கள். ஹோலி கிராஸ் பள்ளியில் என் மகள் 8ம் வகுப்பும் , மகன் 6ம் வகுப்பு படிக்கிறார்கள். என் பிள்ளைகள் இருவருக்கும் என் கணவர்தான் டியூசன் பீஸ் கட்டிவருகிறார் அதன் இரசீதுகள் என்னிடம்காட்டப்படுவதா என்றால் சரிதான். அது **எ.மசா.ஆ.3 (எண்ணிக்கை –2)** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர்கள் ஆவார்கள். அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். என் பெற்றோர் விவசாயம் செய்து வருகிறார்கள். எனது வாக்குமூலத்தில் 2வது பாராவில் சொல்லியுள்ள திருமணத்தின் போது 25 சவரன் நகை போட்டுள்ளதாக வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமான பின்பு எனது கணவர்தான் எனக்கு நகைகள் எடுத்துக் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் குழந்தைகளை இதுவரை நான் போய் பார்த்ததில்லை என்றால் என்னை பார்க்கவிடவில்லை. நான் என் குழந்தைகளை பார்ப்பதற்காக இந்த வழக்கு இல்லாமல் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் என் குழந்தைகள் மேல் விருப்பம்

இல்லாததால்தான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை பார்க்க அனுமதிக்கவில்லை. எதிர்மனுதாரர் திருமணமான சமயத்தில் ஓட்டுனராக இருந்தார். எனது வாக்குமூலத்தில் எனது கணவர் மது அருந்திவிட்டு கொடுமைபடுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அது குறித்து புகார் அளித்துள்ளேனா என்றால் திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அது தொடர்பாக என் கணவர் மீது எந்த முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யவில்லை. நான் என் கணவர் மீது புகார் கொடுக்கவில்லை, அவர்தான் என் மீது ஒட்டன்சத்திரம் அனைத்தும் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் அதன் பேரில் எங்களை வரவழைத்து விசாரணை செய்ததில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்வதாக கூறி எழுதி கொடுத்து வந்தேன் என்றால் சரிதான். என் குழந்தைகள் மீது எனக்கு அக்கரை இல்லாததால்தான் அவர்களை பார்க்க நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை அனுமதிக்கவில்லை. 2019 ம் வருடம் முதல் என் கணவர்தான் குழந்தைகளின் அனைத்து தேவைகளையும் வழங்கி பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. என் கணவர் கொடுக்கும் பொருட்களை குழந்தைகளுக்கு கொடுப்பதில்லை. என் குழந்தைகள் மீது எனக்கு அக்கரை இல்லாததால் நான் கேட்ட பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.24 21:05:08 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.